Regd. No. M 5623 KURAL MALAR Thirukkural Tamil Weekly

# குறள் மலர்

ஆசிரியர்: திருக்குறள் வீ. முனிசாமி

துணை ஆசிரியர்: வே. ஆனைமுத்து

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, மார்கழி, 7 | திருச்சி 22-12-50 வெள்ளி | இதழ் 24

## நேற்றும் இன்றும்!

'இதுவும் ஒரு பெருமையா?' என்று நாம் நினைத்துவிடுவோம். ஆனல் ஆசிரியர் வள்ளுவனரோ, "இதுதான் பெருமை" என்று பேசுகின்ருர். பன்முறை சிந்தித்து உணர்ந்து கொள்ள வேண்டியது. வாழ்க்கைப் பாதையில் ஒரு நல்ல இடம்.

அறிஞர்க்கழகு, உலகில் "இது நிலைத்து நிற்பது—இது நிலையாதது" என்பதை அறிந்துகொண்டு வாழ்வதேயாகும். இதனை உணராது மனம்போன போக்கில் வாழ்வது அறியாமையாகும்.

மனிதவாழ்க்கை நிலையில்லாதது என்பதை அறிந்த அறிஞர்கள்தான், ஒழுக்கம் நிறைந்த உலகப் பொது வாழ்க்கையில் பணியாற்றுவர். துன்பத்தைக்கண்டும் மனம் கலங்கமாட்டார்கள்.

உலகத்தில் மிகுதியாகக் காணப்படும் காட்சி, நிலையாமை என்பதேயாகும். வாழ்க்கையில் மிகுந்திருப்பதும் அதுவேதான்.

'நேற்று இருந்தவர்கள் இன்று இல்லையே' என்று கூறும் நிலைமையாகிய தன்மைதான் மிகுதியாக உலகில் இருக்கின்றது. அந்தப் பெருமையினை இந்த உலகம் கொண்டிருக்கின்றது. இந்த உண்மையினை அறியும் மக்கள் மனக்கவலை நீக்கி, உலக நன்மைக்காக வாழ்ந்து பணியாற்றுதல் வேண்டும்.

**நெருநல் உளன்ஒருவன் இன்று இல்லை என்னும்**
**பெருமை உடைத்து இவ்உலகு.**

(நெருநல் - நேற்று)

T21212
R004F03

# வள்ளுவர் வழிப்பயணம்

'திருவிழு'

[முன் சுருக்கம் :—ஓய்வுக்காக பொது மக்கள் தங்கும் மன்றமொன்றில் தங்கியிருந்த ஆசிரியர் இரண்டு வஞ்சகர்களின் தீயசெயலினைக் கண்டு மனம் நொந்து உலகில் ஏமாற்றுத் தொழில்கள், எவ்வாறெல்லாம் நடைபெறுகின்றதென்பதை அம்பலப்படுத்தினர். பின்னர், மாலை வேளையும் நெருங்குவதறிந்து அவ்விடத்தை விட்டு அகன்று தெருவின் வழியே போய்க் கொண்டிருக்கின்றார்.]

மாலைவேளை; கவலை நிறைந்த உள்ளத்திற்கும் ஆறுதலளிக்கும் நேரம்; உலக வாழ்க்கையில் முன்னேற்றமடையும் நல்வழிகளை மக்கள் கடைப்பிடித்து நடக்கவில்லையே என்ற பெருங்கவலை ஆசிரியர் உள்ளத்தில் இருந்தாலும், மக்களை ஏய்த்துப் பிடுங்கும்கூட்டமேனும் குறையவில்லையே- அக்கூட்டமும்தானே பிழைத்து வருகின்றது என்ற நினைப்புதான் அவரை மிகவும் வாட்டிக்கொண்டிருப்பதாயிற்று.

எண்ணங்கள் ஓட்டம் இருந்துகொண்டிருக்க, அவைகளை மறந்தாற்போல ஆசிரியர் ஓங்கி உயர்ந்த மாளிகைகள் போன்ற வீடுகளைப் பார்த்தவண்ணம் சென்றுகொண்டிருந்தார்.

அந்தத் தெருவின் அமைப்பும், கண்ட வீடுகளின் தோற்றமும், ஆங்காங்கு காணப்பட்ட மக்களின் காட்சியும் ஆசிரியருக்கு ஒரு எண்ணத்தை உண்டாக்கிவிட்டதென்றே கூறவேண்டும். தான் நடந்து சென்றுகொண்டிருந்த அந்த வீதி, பெரிய செல்வந்தர்கள் வாழ்ந்துவருகின்ற இடம் என்பதை ஆசிரியர் நன்குஉணர்ந்துகொள்ள முடிந்தது.

ஒருசிலர் இருந்துவாழ அத்தனைப்பெரிய மாளிகைகள் ஏனோஎன்பது ஆசிரியருக்குப் புலப்படவில்லைதான். செல்வச் செருக்கில் மூழ்கி இன்பத்தில் விளையாடும் மக்கள் வாழும் அந்தப் பக்கத்தில் செல்லும் யாரும் ஒருவித மகிழ்ச்சியடைந்தே தீருவார்கள் என்றுதான் எல்லோரும் எண்ணக்கூடும். ஆனால் நமது ஆசிரியரோ அவ்வாறு எண்ணுவாரா? பட்டினியால் வாடிவதங்கும் மக்கள் உலகில் எண்ணிலடங்காதவர்கள் என்பதை நன்கு தெரிந்துணர்ந்திருக்கும் ஆசிரியர், மாடமாளிகைகளுடன் உல்லாச வாழ்க்கை நடத்தும் மக்களையும் காணுகின்றார் என்றால் உள்ளம் கொதிப்படையாதிருப்பார் என்று எண்ணுதற்கு இடமேது?

இப்படியாக எண்ணியபடி வீதியின் ஒரு ஓரமாகவே சென்றுகொண்டிருந்த ஆசிரியர் நாட்டம் அந்தக் காட்சியில் விரைந்து சென்றுகொண்டிருந்தது. உற்றுப் பார்த்துக் கொண்டே இருந்தார். ஆசிரியர் கண்களில் நீர்வரவில்லை என்று மட்டும் கூறிவிடலாம்.

"போங்க, வெளியே போங்கடா" என்ற ஓசையுடன் பெரிய தடிகொண்டு ஆள் ஒருவன் அங்கிருந்த கூட்டத்தினை வெளியே விரட்டிக்கொண்டு அந்த ஒரு பெரிய வீட்டின் உள்புறத்தில் இருந்து வந்துகொண்டிருந்தான். அந்தோ! அந்தக்காட்சி, கண்டார் உள்ளத்தைக் கலங்கச் செய்வதாகத்தான் இருந்தது.

வயதுமுதிர்ந்தகிழவர்கள், கைக்குழந்தைகளை ஏந்திநின்ற பெண்கள் கூட்டம், கண் குருடர்கள் முடவர்கள் ஆகிய இத்தகையோர் கூட்டம்தான் அங்கு நின்று காட்சி தந்தது. ஏழைகள்; பசியால் வாடும் ஏழைகள்; பட்டினியால் வாடிய முகங்கள்; இக்கூட்டத்தினைதான் விரட்டிக்கொண்டிருந்தான்; அந்தத் தடித்த ஆள்.

"பெரிய பணக்காரர் ஆயிற்றே; தானம் அதிகமாக செய்வார்" என்ற எண்ணத்தில் தான் அவ்வளவு ஏழைமக்கள் வந்திருந்தார்கள் என்றுதான் பொதுமக்கள் நினைக்கச் செய்வார்கள். புதிதாக வருகின்ற பிச்சைக்காரர்கள் அப்படி எண்ணித்தான் அந்த வீட்டிற்கும் வந்திருந்தார்கள். பழைய பிச்சைக்காரர்கள் இந்த வீட்டுக்காரரின் குணத்தினை அறிந்தவர்கள் ஆனபடியால் அந்தப் பக்கம் வரமாட்டார்கள் போலும்!

"அந்தப்பாவி வீட்டில் ஒன்றுமே போடமாட்டார்களப்பா—அங்கு எதற்காகப் போய் நிற்கிறார்கள், பாவம்!" என்று பேசிய வண்ணம் சென்ற மக்களின் குரலோசையும் ஆசிரியர் காதுகளில் விழாமல் இல்லை.

அவ்வளவுசெல்வம் அவன் படைத்திருந்தும் பிறர் அருகில்வந்து அணுகுவதற்கு விடாதவனாக இருக்கின்றானே என்று நொந்தவராக நின்றார் ஆசிரியர். பிறர் நச்சுவதற்கு (அருகாமையில் செல்லுவதற்கு) உரியமனிதனாக இல்லையே என்று எண்ணிப் பார்க்கின்றார். மக்கள் அனைவர்க்கும் இன்பம் தரக்கூடிய பொருள் (பணம்) ஒருவனிடத்தில் சென்று மறைக்கப்பட்டு, தடைப்படுத்தப்பட்டு இருப்பதால், அப்போருள் பிறர் அநுபவிப்பதற்கும் முடியாமல் அல்லவோ போய்விடுகின்றது.

பலரும் இன்பம் துய்த்ததுபவிக்கவேண்டிய நீர் - நல்ல நீர் நிறைந்த தாடகம் - ஒருவனால் சொந்த உரிமை பாராட்டப்பட்டு, பிறர் நீர் அருந்தவிடாமல் இருக்கப்படுமேயானால் அது எவ்வளவு கொடுமையானதாக இருக்கமுடியும்?

உலகில் உருண்டோடி இருந்து பலருக்கும் இன்பம் தரவேண்டிய பொருள் ஒருவன் கையில் சிக்கியிருப்பதால், அந்தப் பொருளும் பிறருக்கு நன்மைதர முடியாதவாறு இருக்கின்றதென்பது ஒருபுறமிருந்தாலும், அந்தப் போருள்படைத்தவனும் கொடிய எண்ணம் கொண்டவனாக அல்லவோ மாறிவிடுகின்றான். பணம் அவனை ஒரு நச்சுமரமாக ஆக்கிவிடுகின்றதே!

இப்படிப்பட்ட எண்ண அலைகள், அந்தப்பணக்காரன் வீட்டின்முன் நின்ற ஏழைமக்களை விரட்டியடித்த காட்சி உண்டாக்கிவிடவே ஆசிரியர் பலவாறு சிந்திக்கத் தொடங்கிவிட்டார். இப்படிப் பட்டவன் - பணத்தைத் திரட்டி வைத்துக் கொண்டு பிறர் அணுகவிடாமல் காத்துக் கொண்டிருப்பவன் ஒரு ஊரில் நடுமத்தியில் இருப்பதற்கும் அனுமதிக்கப்படாதவனாயிற்றே என்கின்றார்.

அவன் வைத்திருக்கும் செல்வம் (எட்டிமரம்) நச்சுமரம் பழுத்திருப்பதற்குத்தானே சமம் என்பதாகக் கூறுகின்றார். நச்சு (நஞ்சு) உடைய மரம் பழுத்தால் அருகாமையில் யாராவது செல்ல ஆசைப்படுவார்களா? அந்த மரம் ஊருக்குள் இருந்தும் பயனில்லையே! அதுபோன்று பிறரை அணுகவிடாதவனிடத்தில் இருக்கும் செல்வம் - யாருக்கும் பயன்படாமல் போகின்றதே! அவன் ஊருக்குள் மக்கள் மத்தியில் வாழுவதால், மற்றவர்கட்குத் துன்பமேயன்றி பயனேதும் உண்டு என்று கூறமுடியுமா?

மாளிகைகளில்வசித்துக்கொண்டு, பணம் படைத்தும் நஞ்சுகலந்த உள்ளத்தவர்களாகிய அப்படிப்பட்டவர்களுடைய வீட்டின் முன் பட்டினியால் வாடிவதங்கும் மக்களுக்கு ஏதேனும் இரக்கங்கொண்டு பிச்சைதந்து உதவாமல் கொடிய பாதகர்களாக விரட்டியடிக்கும் காட்சியினைக்கண்ட ஆசிரியர் உள்ளம் அவர்களை மரமென்றே கூறி - நச்சுமரம் என்றே அழைத்துக் குறளொன்று தருகின்றார்.

நச்சப் படாதவன் செல்வம்நடு ஊருள்
நச்சுமரம் பழுத்தற்று

எளிமையாக இந்த நல்லுரை தந்த ஆசிரியர் அந்த இடத்தைவிட்டு அகலவில்லை. நின்றுகொண்டே இருக்கும்படி செய்துவிட்டது! எது?

(தொடரும்)

தொடர்கதை
5

# காமவல்லி எம். ஏ.,

(வே. ஆனைமுத்து)

புன்முறுவலின் கீறல், முகத்திலே பதித்த எண்ணக் குறிகள் எத்தனையோ வகை! நெடுநாட்கள் நெருங்கிப் பழகியவர்களோ அன்றித் தமது தொடர்பை முன்னரேயே பெற்றிருந்தவர்களோ அல்லர், அவர்கள்.

உள்ள உணர்வையும், நெஞ்சின் நெகிழ்வையும், மார்பின் நீர்மையையும் தெள்ளத் தெளியக் காட்டுவது முகந்தானே? பளிங்குக் கல், பக்கத்திலே இருக்கவேண்டிய கட்டாயம் இன்றி, எங்கிருந்தாலும், தக்க நிலையிலே அல்லது கோணத்திலே வைக்கப்பட்டால், ஒளிவீசும் ஆற்றலுக்குத் தக்க தொலைவில் உள்ள பொருள்கள் நிழல் தந்துதானே ஆகவேண்டும்?

முற்றாட்டெண்ணமும், உதட்டில் வெல்லப் பேச்சும், உள்ளத்திலே கள்ளத் திட்டமும் கொண்டவன், வாய்ப்பேச்சிலே வாய்மையும், நெஞ்சிலே வஞ்சச் சூழ்ச்சியும் பெற்றவன், விறுவிறுத்த முகம் - கடுகடுத்த சொல் - துடிதுடிக்கும் உடலம் இவ்வளவிலேயே தனது பேதைத் தன்மையின் நிகழ்ச்சியினை விளக்கி விடுகின்றான். உள்ளக் கண்ணாடி, அவனிடமும் இருப்பதுதான்! இருந்தும் என்ன? வஞ்சப் புழுதியும், கள்ளத்திட்டப் புகையும், அக்கண்ணாடியிலே படிந்தபிறகு, எந்தக் கோணத்திலிருந்து பார்ப்பினும் அவனது அழுக்கு உள்ளம்தானே அவனது முகத்தில் - முகக் கண்ணாடியில் தெரியும்!

தூய்மையான கண்ணாடி, போதிய அளவு தொலைவிலே நிறுத்தப்பட்டால் பக்கத்துப் பொருள்களைக் காட்டியே தீரவேண்டும்.

கட்டிளமைக் கவர்ச்சியும், பருவப் பரிப்பும், கூடிப் பழகும் வாய்ப்பும் பெற்ற இருவரது முகங்கள் எவ்வளவு தூய கண்ணாடிகள்!

வைக்கவேண்டிய கோணத்தில் அல்லது இடத்தில் உள்ள கண்ணாடிதான், பக்கத்துப் பொருளைக்காட்டும். ஆனால் பருவ இளைஞரின் முகக்கண்ணாடி, ஓட்டைக்குடிசையும் - சோற்றுப் பஞ்சமும் - அரை இடுப்பு ஆடையும் பெற்ற இடத்திலே உள்ள ஒருத்தி, பருவமங்கையானால், மேட்டுக்குடி மகனொருவன் உள்ளத்திலே இடம் பெறுமற் போவாளா? அதற்குத் தடைதான் உண்டா?

இளமையது அருமையும், தாளாண்பக்கமும் என்ற முயற்சியுடைமையும் எந்த இடத்தில் இருப்பினும் அழுக்கற்ற நிலையில் காட்சியளிக்கின்றனவல்லவா? உள்ளம் உந்த உந்தப் பலவாறான கருத்துக்களை நெஞ்சில் ஏற்றிக்கொண்டே போனான் இளமுருகன்.

குமரிமுனையின் பக்கத்தில், சிறிது வடமேற்கில் இருப்பதாகச் சொன்ன ஊர்தான் மணக்குடி. வரிசையாக நின்ற தென்னஞ் சாலையும், குவிந்துகிடந்த மணல்மேடும், அறுந்து கிடந்த சிற்றோடைக் கால்களும் அவர்கள்நடைப்பாதையிலே குறுக்கிட்டன. மணற் குன்றைக் கடந்த அவர்கள் கண்ட காட்சி எவ்வளவு மறக்க முடியாதது.

கடல் நீரில் திளைக்கும் பிள்ளைப்பருவத்தினர் - கட்டுமரம் தள்ளிக் கடலிலே மிதக்கும் சிறார்கள் சிறுமிகள், கடலிலே விளைந்த கண்ணாடி போன்ற மீன்களைக் கரைசேர்க்கும் இளைஞர்கள், இளமங்கைகள், கடற் செல்வமாகக் கருதி அரித்து வந்து, சோழிக் கூடுகளைக் கொட்டும் வலைஞர்கள் கண்கவரும் சோழிகளை வகை வகையாகப் பிரித்தெடுக்கும் முதியோர் – என்னென்ன காட்சிகள்!

கிறித்துவ சமயம், அதுதோன்றிய மிக அண்மைக் காலத்திலேயே செந்தமிழ் நாட்டின் தென் பகுதியிலே குடிபுகுந்ததை நினைவூட்டும் கிறித்துவ சமய கற்சிலை, குறுக்காகவும் நெடுக்காகவும் ஓடும் சிறுவர்களின் கழுத்திலே காட்சிதரும் கிறித்துவ சமய சிலுவைக் கட்டை, இவையெல்லாம் அவர்கள் கண்ட குமரிமுனைக் காட்சிகள்.

* * *

‘மணி பனிரெண்டுக்கு மேலாகிவிட்டது. வெயில் கொடுமை தாங்க முடியாது. பக்கத்துத் தோப்புக்குப் போகலாமே’ என்று தொடங்கினான், இளமுருகன்.

‘உன் எண்ணம் என்ன?’ என்று கேட்பதுபோல் காமுவின் முகத்தைப் பார்த்துக் கொண்டாள் மீனா.

‘அவர் சொல்கிறபடி தோப்புப் பக்கம் செல்லவேண்டியதுதான்’ என்ற விடையை சிரிப்பின் வழியே வெளியிட்டாள், காமு.

மீனா, காமுவுக்கும் முருகனுக்கும் இடையிலே நிற்கும் தூது காலையிலே வந்த வருத்தத்தைத் தீர்த்து வைத்துப் பெற்றோரை ஒற்றுமைப் படுத்தும் இளஞ்சேய்- குறைவுபடத் தொடங்கும் அன்பைக் காதலரிடையே பெருக்கிவிடும் விருந்தினர் இவர்களின் தூது, எவ்வகையிலும் மீனா மேற்கொண்ட தூதுக்குக் கீழ்ப்பட்டதுதான்.

பழைய காதலரின் சிறுபிணக்குத் தீர தூது போவதும், இளம்பருவத்தினரிடையே இணைப்பை ஏற்படுத்தத் தூது நிற்பதும் எத்தனையோ வேறுபாடுடையன வன்றோ!

* * *

வெயிலின் கொடுமை உடலைத் தாக்கும்-வேகச் செய்யும் ஆனால் பசியின் கொடுமை? ஏதாவது கிடைத்து உண்டால் போதும் என்ற நிலைக்கு, பசிக்கொடுமை அவர்களை வருத்தியது.

‘இளநீர் கொண்டுவா, தம்பீ!’ தோப்பில் நீற்று முடைந்து கொண்டிருந்த பையனை ஏவினான், இளமுருகன்.

‘விடலை ஒன்று இரண்டணா. எத்தனை வேண்டும் உங்களுக்கு?............ஆளுக்கு இரண்டு போதுமா?’ என்று கேட்டுக் கொண்டே நெருங்கினான், தோப்புக்காரன்.

‘விடலை ஒன்று இரண்டணா’ என்ற சொற்கள் ஏதோ ஒரு புது எண்ணத்தை அவர்கள் உள்ளத்திலே புகுத்தின.

சோழநாட்டிலே ‘குத்தகை’ என்பதைப், பாண்டிநாட்டிலே ‘பாட்டம்’ என்கின்றனர். சேரநாட்டுத் தமிழர், ‘நகர்ந்து உட்காரு’ என்று கூறுவதைப் பாண்டிநாட்டு மக்கள் ‘நீங்கி இரு’ என்று சொல்லுகின்றனர். இளந் தேங்காயை, ‘இளநீர்’ என்று நாம் கூறினால், ‘விடலை’ என்று அவன் கூறுகிறான். ‘விடலை’ என்ற சொல்லுக்குப் ‘பாலை’ என்ற பொருள் இருப்பதாக நினைவு வருகிறது. ‘விடலை’ பாலை நிலத்தைக் குறித்து, ‘பாலை’ மணற்பாங்கான பகுதியைத் தெரிவித்து, ‘மணற்பாங்கான பகுதி’ தென்னை வளருவதற் கேற்ற இடத்தை விளக்கி, ‘தென்னை வளர்ச்சிக் கேற்ற இடம்’ என்பது தென்னைக்கு ஆகி, ‘தென்னை’ என்பது ‘தேங்காய்க்கு’ப் பெயராகி, எத்தனையோ மாற்றங்களை அடைந்துவந்த பெயராக அன்றோ நினைக்க வேண்டியுளது? கொடுந்தமிழ், செந்தமிழ் பைந்தமிழ் என்ற பாகுபாடுகளைத் தமிழ்ப் பேரறிஞர்கள் விளக்கிக் காட்டுகின்றனரே, இந்த வகையில் இது கொடுந்தமிழ்தானோ? தமிழுணர்வும், ஆர்வமும் தேங்கியவன் இளமுருகன். அவனது எண்ணத்துடிப்பில் இத்தனை ஓசைகளும் இடம்பெற்றிருந்தன.

* * *

‘நேற்று மிகவும் அலைச்சல்; இல்லையா மீனா?’ என்று கேட்டுக்கொண்டே உடம்பை முறுக்கி எழுந்தாள், காமு. அவர்கள் தூக்கம் கலைந்து எழுந்தபோது காலை மணி எழு. பயணஏற்பாடு மிகச் சுருசுருப்பாக முடிந்தது. அறையின் சுவற்றிலே தொங்கிக் கொண்டிருந்த பழைய நாட்காட்டி, விடுமுறை முடியப் போவதை உணர்த்தியது. திருநெல்வேலி - மணியாச்சி - மதுரை ஒவ்வொரு சந்திப்பாக வண்டி நின்றுகொண்டே வந்தது. உணவு வசதியில்லாத நிலயங்களில், இளநுங்கும்,

[6-பக்கம் பார்க்க]

குறள்மலர்

22-12-50] திருச்சி [வெள்ளி

## வைரத் தூண்

சுதந்திர மாளிகையின் வைரத் தூண் சாய்ந்துவிட்டது; ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விரட்டிய எஃகு உள்ளம் படைத்த மனிதர் மறைந்தார்; இரும்புத்தலை ஏந்தல் என்று உலகம் போற்றும் பட்டேல் அவர்கள், இன்று இல்லை இங்கு!

நேரடி நடவடிக்கை (Direct Action) என்ற மந்திரத்தைத் தேசமெங்கும் பரப்பிவிட்டவர் என்று கூறப்படவேண்டிய நவகாளி தாதா ஜின்னாசாகிபு அவர்களை எதிர்த்து கத்திக்குக்கத்தி (Sword to Sword) என்று கூறிய குரலோசை அடங்கிவிட்டது. உரம் செறிந்த உள்ளத்தின் ஒலி முழக்கம் இனி இல்லை இங்கு!

முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பலாகுவர் என்பது உண்மைதான்! முடிசார்ந்த மன்னர்கள் அனைவரையும் தம் கைப்பிடிக்குள் வைத்து, மன்னனையும் சாதாரண மகனாக ஆக்கிய ஒரு மந்திரவாதி என்று கூட வியந்து கூறும் ஆற்றல் நிறைந்த அறிஞர் இன்று இல்லை இங்கு!

அரவிந்தர் இறந்தார் என்ற செய்தி மக்களைத் துக்கத்தில் ஆழ்த்தியது என்று கூறினாலும் பட்டேல் மறைவு நம்மை எல்லோரையும் துடிதுடிக்கும் துக்கத்தில் வீழ்த்திவிட்டது என்றே கூறுதல் வேண்டும்.

'காங்கிரஸ் கட்சிக்கே கேடு சூழ்ந்துவிட்டதே' என்று நாடு கலங்கும்நிலை ஏற்பட்டுவிட்டதே என்ற கூக்குரல் இனி எவ்வாறு மறையுமோ? கட்சிக்கே ஜீவநாடி என்று கூறக்கூடிய பெரிய இடம் இல்லாமல் போய் விட்டதென்பது பெரும் நட்டமேயாகும்.

எந்தத் தலைவருக்கும் அளிக்கப்பட்டிராத பெருந்தொகை என்று பேசக்கூடிய மதிப்பில் பதினைந்து லட்சம் ரூபாய் அன்பளிப்பு பெற்ற பெருஞ் சிறப்பு அவருக்கே அமைந்ததென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சுதந்திரம் அடைந்தது பதினைந்தாம் தேதியில் என்று பேசுகின்ற குறிப்பு, பட்டேல் மறைந்ததும் பதினைந்தாம் தேதியில் என்ற ஒற்றுமைக்கு ஓர் அழகு செய்வதாகவே உள்ளது. ஆகஸ்ட் பதினைந்தைக் கண்ட உருவம் டிசம்பர் பதினைந்தில் மறைந்ததே. அந்தோ!

"எனக்கோ வயது அதிகமாகிவிட்டது. இன்னும் சில நாட்கள் தான் உயிர்வாழ்வேன் என்று எண்ணுகின்றேன். இந்தச் சொற்ப நாட்களும் எனது நாட்டுப்பணியினை ஆற்றிக்கழிக்கவே ஆசைப்படுகின்றேன்" என்று, சமீபத்தில் ஐதராபாத்தில் மறைவாக்கென உரைத்தாரே என்ற இதய ஒலிகள் உள்ளத்தை உருக்குகின்றன.

ஓய்வின்றி உழைத்து உயிர் நீத்த உத்தமரின் நற்புகழ் ஓங்கி உயர்வதாகுக! தேசத்திற்கு உழைத்து சின்னாட்கள் ஓய்வெடுத்தார் என்றுகூடப் பேச முடியாதவாறு அருஞ்சேவை செய்து மறைந்த அண்ணல் அவர்கள் விட்டுப்போன நல்லெண்ணங்களும், ஆற்றலும், ஊக்கமும் நாட்டு மக்களை முன்னேற்ற வழி செய்யுமாக!

---


## 'தொண்டு'

('SERVICE')

மாதம் இருமுறை தமிழ் இதழ்

**1-1-51ல் வெளிவருகிறது**

தனி இதழ் 2 அணா

ஆசிரியர்: வ. வீராசாமி B. A., துணைஆசிரியர்: பெ. கருணாகரன்

'சுதந்திரம்' அடைந்துள்ள நாட்டில் அடிமைகளாய், 'குடியரசு' நாட்டில் உரிமையும் வாழ்வும் அற்றவர்களாய் அல்லலுறும் ஆதிதிராவிட மக்கள், சமூகத்தில் சமத்துவம் பெற, பொருளாதாரத்தில் முன்னேற, அரசியலிலும் சர்க்கார் அலுவல்களிலும் உரிய பங்கையடைய "தொண்டு" சேவை செய்யும்.

கண்மூடிப் பழக்கங்களை மண்மூடிப் போகச்செய்து, பகுத்தறிவை வளர்த்து எல்லா பிற்போக்கான மக்கள் நலனுக்காகவும் "தொண்டு" பணியாற்றும். ஒவ்வொருவரும் ஆதரிக்கவேண்டிய இதழ் "தொண்டு"

ஆண்டு சந்தா ரூ. 3-0-0 அரை ஆண்டு சந்தா ரூ 1-8-0

அரை ஆண்டுக்குக் குறைந்த சந்தா இல்லை.

இன்றே, உங்கள் பிரதிக்கு எழுதிச் சந்தாதாரராகுங்கள்.

எங்கும் ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

முகவரி: ஆசிரியர், "தொண்டு"
40, ஆனைகட்டிமைதானம், திருச்சிராப்பள்ளி. H. P. O.

# பின்னணி சங்கீதம்

"வீணை"

## திருக்குர்ஆன்

இந்த வாரம், அநேகமாக எல்லா முகம்மதியர்கள் வீட்டிலும் நல்ல சாப்பாட்டு விருந்து நடைபெறுகிறது என்றுதான் கூறவேண்டும். பிரியாணி என்பதற்கு உண்மையிலேயே ஒரு அலாதியான மதிப்பும் பெருமையும் கொடுக்கப்படுகிறது என்றால் அது இந்த வாரத்தில்தான் என்று கூறவேண்டும்.

இந்த வாரம் முகம்மதியர்களுக்கு உயிருக்குயிரான நன்னாளைக்கொண்டதாகும். என்? நபிநாயகம் பிறந்த நன்னாளாகும். முகம்மது நபி பிறந்த திருநாள் விழா சென்ற வெள்ளிக்கிழமை பல ஊர்களிலும் கொண்டாடப்பட்டது.

நமது தேசத்தில்-குறிப்பாகத் தமிழ்நாட்டில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் எல்லாம் எது சம்மந்தமாகக் கொண்டாடப்படுகின்றன என்பது எல்லா மதத்தினரும் தெரிந்துகொள்ளமுடிகிறது.

கிறிஸ்மஸ் பண்டிகை-ஏசுபிறந்த நன்னாள்-என்றால் அநேகமாக, திராவிடர்கள், ஆரியர்கள், முகம்மதியர்கள் எல்லோருக்குமே எதற்காகக் கொண்டாடப்படுகிறதென்பது தெரிந்துதான் இருக்கின்றது. அதுவேபோன்று ஆரியர் பண்டிகையான தீபாவளிகூட எல்லா மதத்தினருக்கும் தெரிந்துதான் இருக்கின்றது. தமிழ்த் திராவிடர்களின் தைப்பொங்கல் திருநாளும் நன்கு புரியுமாறுதான் எல்லா மக்களுக்கும் மத வேறுபாடின்றி அறிந்துகொள்ளமுடிகிறது.

ஆனால் முகம்மதியர்கள் பண்டிகை என்பது மட்டுந்தான் பொதுவாக மக்களுக்குத் தெரிகிறதேயன்றி எதற்காகக் கொண்டாடப்படுகின்றது என்பது பெரும்பாலும் மக்களுக்குத் தெரிவதில்லை என்றுதான் கூறவேண்டும்.

இந்த குறைபாட்டிற்குக் காரணம் முகம்மதியர்களேயாவார்கள். அல்லாசாமி பண்டிகைக்குத் துக்கப்படுவதை விட்டுப் புலி வேஷம் ஆடுகிற கூத்தாட்டத்தை எங்கு போய்க்கூறுவது?

இந்த வாரம் கொண்டாடப்படும் முகம்மது நபி விழா என்னவென்பதை உலகம் நன்கு அறியுமாறு எடுத்துக் கூறப்படாத காரணம் யாது? முகம்மதிய மக்களுடைய கொள்கை, போக்கு, மதம் எல்லாம் அலாதியானது; மற்றவர்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இருக்க இடமில்லை—என்பன போன்ற எண்ணங்கள் இன்று நாட்டிடையே பரவி இருக்கக் காரணம் என்ன? மதப்பித்து ஒன்றினையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்வதைத்தான் மேற்கொண்டு வாழ ஆரம்பித்து விட்டார்களேயன்றி பொதுமறையாகவும் பொதுக்கொள்கைக்கும் இடம்தரும் வகையில் குர்ஆனில் கூறப்பட்ட கருத்துக்களைப் பொதுமக்கள் அறியும் தொண்டினை முகம்மதியத் தோழர்கள் முனைந்து செய்யவில்லை என்பது வருந்தத்தக்க தவறேயாகும்.

இன்று ஏசுநாதர் வரலாறும், கிருஷ்ண பரமாத்மா வரலாறும், பொதுமக்களிடையே பரவியிருக்கும் அளவு முகம்மது நபி வரலாறும் வாழ்க்கையும் மக்கள் தொண்டும் பரவாதிருக்கக் காரணம் என்ன?

இந்த குறைபாட்டினை முகம்மதியத் தோழர்கள் இனியேனும் நீக்க முன்வர வேண்டுமன்றோ?

தமிழ் நாட்டில் ஆங்காங்கு முகம்மது நபி சங்கங்களை நன்கு விளம்பரப்படுத்தப்பட்டு முறையாக அமைக்கப்பட்டு அவரது கருத்துரைகள் நாடறியச் செய்யாதிருப்பது என்? அவ்வாறு செய்வது மதத்திற்கு மாறுபட்டது என்று யாரேனும் கூற வருவாரேயாயின் பகுத்தறிவுக்கும் சீர்திருத்தத்திற்கும் பின்னர் எவ்வாறு இந்த நாட்டில் இடம் இருக்க முடியும்?

குர்ஆன் முகம்மதியர்கள் வேதம் என்பது நன்கு விளம்பரப்படுத்தப்பட வேண்டாமா? இதனைப் பிறருக்கு எடுத்துக் கூறும் செயல் எத்தனை முகம்மதிய கற்றறிவு படைத்த தோழர்களுக்கு முடியுமென்று கேட்கின்றோம்?

கருத்து வேறுபாடுகளும் பிறவும் எவ்வாறிருந்தாலும் விதவைத் திருமணம் என்கின்ற ஒரு மகத்தான முறை நபி நாயகம் வகுத்தருளிக் காட்டியதென்பதை இவ்வுலகம் என்றும் மறக்க முடியாது. பெண்கள் தனித்திருக்க வேண்டிய 'தலைவிதி' என்ற கொடுமை இஸ்லாத்தில் காண முடியாதே. பெண்களை மறைத்து வைத்திருக்கும் கோஷா முறை நீக்கப்பட வேண்டும் என்று எண்ணும் சீர்திருத்த மனப்பான்மை கொண்ட முஸ்லீம் தோழர்களும் அஞ்சி இருக்கவேண்டிய நிலைமட்டும் வருந்தவேண்டியதொன்று என்றுதான்கூற வேண்டும்.

ஆசிரியர்கள் குட்டிக் கோயில்களைக் கட்டித் தேர் திருவிழாக்களை நாட்டில் புகுத்திவிட்டதுபோல் சீர்திருத்த மனப்பான்மையினைக்கொண்ட இஸ்லாத்திலேயும் இன்று, கோரிகள், தர்க்காக்கள் - பூசைகள், சந்தனக்கூடு கந்தூரி மகோற்சவங்கள், சமாதி பூசைகள், கொடிகூண்டு பூசை, சீராப்புராண பாராயணம், அல்லா சாமிப்பண்டிகை - போன்ற சடங்குக் கூத்துக்கள் பரவிவிட்டன என்றே கூற வேண்டும்.

இவைகள் நல்லமுறையில் நீக்கப்படுமேயானால் உண்மையான இஸ்லாத்தைக்காண முடியும்!

தமிழ்ப் பெருமக்களின் கருத்தும் முகம்மதிய திருக்குர்ஆன் கருத்தும் ஒன்றுபடும் பல நற்கருத்துக்களில் ஒன்றினை மட்டும் இந்தச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த ஆசைப்படுகிறோம்.

ஆரியர்களுக்குத் தத்து எடுக்கும் சட்டம் இருப்பதுபோல் முகம்மதியர்களுக்கும் இல்லை - திராவிடர்களுக்கும் இல்லை - ஆங்கிலேயர்களுக்கும்இல்லை - என்பதை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும்.

சட்டம் அறிந்தவர்கள் இதனை நன்குணர்வர். தத்து என்பது பிள்ளை இல்லாதவர்கள் பிறர் பிள்ளைகளைத் தமதாக ஆக்கிக் கொள்ளுவதாகும்! இது ஆரியர்களுக்கே உரியது. அவர்கள் வேதத்தில் மட்டும் தான் காணப்படுகிறது. பிள்ளை இல்லாவிட்டால் தகப்பன் புத்து என்கின்ற நரகத்திற்குப் போய்விடுவானாம். இது அவர்கள் சட்டம்!

இப்பழக்கம்-சட்டம்-திராவிடர்களுக்கும், முகம்மதியர்களுக்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தப்ப முடிவதில்லை

மகாகவி காளிதாசர், முடியாட்சியையும் அதன் சின்னமான குப்த சாம்ராஜ்யத்தையும், அதற்கு ஆதாரமாய் இருக்கும் பிராமண மதத்தையும் பலமாக ஆதரிப்பவர். அப்படி ஆதரிப்பதன் நோக்கம் என்னவென்பதை, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். காளிதாசர், இந்த வேலைக்குத் திங்கநாகர் ஒரு பெருந்தடை என்று கருதினார். "இந்தத் திராவிட நாஸ்திகன், ஒரு விஷ்ணுவை என்ன, முப்பத்தைந்து கோடிக் கடவுள்களின் சிம்மாசனத்தையும் அசைத்துவிடுவான் போலிருக்கிறதே" என்று சொல்வார். "மதத்தின் பெயரால் அரசர்களுடையவும், பிராமணர்களுடையவும நலனுக்காக, நாங்கள் என்னென்ன தந்திரங்களைக் கையாளுகிறோமோ அவற்றின் ஆழத்திலே புதைந்து கிடக்கும் சுயநல ரகசியம், இந்த நாஸ்திகனின் பார்வையிலிருந்து தப்ப முடிவதில்லை" என்று வருத்தப்படுவார்.

(வால்காவிலிருந்து கங்கை வரை)

## காமவல்லி எம். ஏ.,

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இளநீரும்தான் பயணக்காரர்கட்குச் சிற்றுணவு. நுங்குக் கூடையைக் கூப்பிட்டுக் கொண்டே தலையை வெளிநீட்டியவர்கள், பல இடங்களில், பல் நிலையங்களில், தொடர் வண்டிப் பொறி (என்ஜின்) ஓரமாக, வரிசையாக நின்ற தாய்மார்களைக் கண்டனர். ஒருவர்க்கு ஒருவர் முந்திக் கொண்டு இரண்டு பானைகளை உடைத்து கொட்டிவிட்டு இருவர் நின்றபோதுதான், அவர்கள் குடிநீர் வசதியில்லாத குடிகள் என்பதும், தொடர்வண்டிப்பொறியில் நீர் பிடித்துச் செல்பவர் என்பதும் வண்டியுள் இருந்தவர்களுக்குத் தெரிந்தது. வேலையின்றி ஓய்ந்துள்ள நேரங்களிலும், உலாப் பயணங்களின் போதும் உற்ற துணையாக இருப்பவை நூல்களும், இதழ்களும் செய்தித்தாள்களும்தானே !

அழகான அட்டைகள், மழமழப்பான தாள்கள் கண்கவரும் முகப்புப் படங்கள் உள்ள நூல்களும் இதழ்களும் எத்தனையோ வகைகளில் வெளிவருகின்றன. காலம் முழுதும் கற்றுத்தேர்ந்து அடங்க வேண்டிய நூல்கள், பொழுது போக்குக்காகத் துணைநிற்கும் கீழ்த்தர நூல்கள் ஆக எத்தனையோ வகை.

பொழுதுபோக்குக்காக என்று எண்ணித் தான் ஏதோ நான்கு இதழ்களை வாங்கிவந்தான். இளமுருகன்.

தொடர்வண்டி, மதுரை சந்திப்புவிட்டு நகர்ந்தது. உலாப்பயண நண்பர் நால்வரும் தலைக்கொரு இதழாக எடுத்துப் புரட்டினர். தொடர்வண்டியின் விசையினும் மிஞ்சிய விசையில் எண்ணத்தை ஓட்டினர்; இதழைப் புரட்டிக்கொண்டே இருந்தனர்.

" கண்கவர் வனப்பும், கட்டிளமையும், உள்ள இருவர் நெருங்கிப்பழக நேரும் காலத்தில்; பருவ எழுச்சியின் தூண்டுதலால் உணர்ச்சி வயப்பட்ட இருவர் ஒருங்கே பழகவேண்டுங்காலத்தில்; ஆடவன் - மண்குடிசை இருக்கையும், மரப் பலகைப் படுக்கையும், கிழிந்த கந்தையுடையும் உடையவனாகஇருந்தால் அதனால் காதல் தடைப்படுமா ? "

" ஆடவள் ஒரிடுப்புக்கூறை கட்டித்தான் உறங்கநேரும் என்றாலும், ஒரிடுப்புக்கூறையால் இறுக்கிப் பிணித்துக்கொண்டு, வேறொரு பகுதியை வெயிலிலே உலர்த்தி உடுத்தநேருமே என்றாலும், ஒருகையால் உடையையும் மறுகையால் உடலையும் தழுவிக்கிடக்கவேண்டி நேருமே என்றாலும் இதற்குமேல் வாழ்வளிக்க முடியாத காதலனை, ஏழை என்பதற்காக, செல்வக் குடி நங்கையொருத்தி சீர்தூக்கிப்பாராது விடுவாளா ? "

" கூழுக்கு அழும் குழந்தைகளுடனும், விருந்தை மறுக்க நேரும் கணவனுடனும், உற்றாரைத் தாங்கமுடியாத வாழ்வுடனும் ஒட்டிக் கிடக்க நேருமே என்ற அச்ச எண்ணம் எழுந்த போதும், இளமையின் அருமையையும், பருவத்தின் பக்குவத்தையும் பாழ்படுத்தாது பயன் படுத்த விரும்பும் காதலரைப் பணச் சுவர் தடுக்குமோ? பணத் திமிர்தான் தாக்குமா? இளமைப் பொலிவும், இன்ப உணர்வும் தோய்ந்த காதலர் முன் வளமைப்படை—வளமை விழைவு—ஆரவார வாழ்வளிக்கும் பணச் செருக்கு தோற்று ஓடித்தானே ஆகவேண்டும்?"

"உள்ளத்தால் ஒன்று பட்ட காதலர், பணம் படைத்தவர்—பாட்டாளிகள் என்ற மேடு பள்ளங்கள், மேல் குடியினர் தாழ் குலத்தினர் என்றவேறுபாடுகள், இவற்றில் எவையேனும் தடுக்கிவிட இடர்ப்படுவார்களா? "

"வேண்டாத வேறுபாடுகளை எழுப்பி' இளமைக் கூட்டுறவினைப்பிரிக்க முந்துறும் எந்தச் செயலேனும் உருப்படுமா? "

"இளமையும் காமமும் ஓராங்குப் பெற்றார்
வளமை விழை தக்கதுண்டோ உளநாள்
ஒரோ ஒகைதம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன் கூறுடை உடுப்பவரே யாயினும்
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை அரிது
சென்ற விளமை தரற்கு" [அரோ

என்ற அடிகளைப் படித்துவிட்டு, அடுத்த பக்கத்தைத் திருப்புவதையும் மறந்து பெருமூச்சு விட்டாள், காமு.

இலக்கிய ஏடுகள் என்ற பெயருக்கு இலக்கணமாக இரண்டொரு கட்டுரைகளாவது, இதழ்களில் இடம் பெற்று

<u>தொடர்ச்சி</u>

## அறத்துப்பால்] 3 [நீத்தார் பெருமை 4

**உரன்என்னும் தோட்டியான் ஓர்ஐந்தும் காப்பான்**
**வரன்என்னும் வைப்பிற்குஓர் வித்து.**

[உரன் என்னும் - வன்மை நிறைந்த அறிவு என்கின்ற, தோட்டியான் - அடக்கும் ஆற்றலுள்ள கருவியாகிய அதனால், ஓர்ஐந்தும் - (மெய், வாய், கண், மூக்கு, செவி) ஆகிய ஐந்து பொறிகளையும், காப்பான் - அடக்கிக் காத்துவாழ்பவனாகிய முனிவன், வரன் என்னும் - செயற்கரிய செய்யும் ஆற்றல்தரக்கூடிய, வைப்பிற்கு - இடத்திற்கு, ஓர்வித்து - (அங்கே முளைத்து வளரக்கூடிய) ஒரு விதை போன்றவனாவான் (என்பதாம்) ]

**விளக்கம்** :—மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து பொறிகளையும் அடக்கி வாழுகின்ற பேரறிஞன் வரன் என்னும் ( அதாவது செயற்கரியசெய்யும் ஆற்றல் ) என்று பேசப்படக்கூடிய நிலத்தில் விளையக்கூடிய ஒரு விதைபோன்றவன் ஆவான் என்பதாம்.

உரன் என்பது என்ன? ஓர்ஐந்து என்பன யாவை? காத்தலாவது யாது? வரன் என்றால் என்ன? வித்து ஆகின்றவன் யார்? — என்ற வினாக்களுக்கு விடையளித்து நிற்பதாக இக்குறட்பா அமைந்திருக்கின்றது.

உலகில் சிறப்பாகப் பேசப்படுவதும் வாழ்க்கையின் திறவுகோலும் வழிகாட்டியுமாக இருப்பதும் அறிவு ஒன்றேயாகும். இவ்வுண்மை அறிவுடைமை என்ற தனி அதிகாரத்தில் நன்கு காணப்படுகின்றது. ஐம்பொறிகளையும் அடக்கி ஆளும் ஆற்றல் முதிர்ந்த அறிவாகவும், முனிவர்களால் செய்யமுடிவதாகிய ஒன்றாகவும் இருப்பதால் அதனை உரன் என்ற சொல்லினால் விளக்கினர்.

தோட்டி என்பது யானைகளை அடக்கும் அங்குசத்தினைக் குறிப்பதும் ஆகும். ஐம்பொறிகளையும் அடக்குவதாகக் குறித்ததால் அறிவிற்குப் பொருத்திக் கூறினர். திருக்குறளில், தோட்டி என்பது ஒரே இடத்தில்தான் (இந்தக் குறட்பாவில் மட்டும்தான்) காணப்படுகின்றது.

**வரன்** என்கின்ற சொல்லும் இந்த ஒரு குறட்பாவில்தான் காணப்படுகின்றது. குறளில் வேறு எங்கும் காணப்படவில்லை. வரன் என்பது "ஆற்றல் நிறைந்த பெருஞ் சிறப்பினைக்" கூறுவதாகும். அதனை ஒரு நிலமாக (இடமாகக்) குறிக்கவேண்டியே வைப்பு என்றார். அங்கு முளைக்கக்கூடிய விதை என்றார். யாரை? எதனை?

ஐந்து பொறிகளையும் அடக்கிவாழும் பேரறிஞராகிய முனிவர்கள் செயற்கரிய செய்யும் பேராற்றல் நிறைந்தவர்களாக இருப்பார்கள். அதனால்தான், அத்தகைய முனிவர்களை 'வரன் என்னும் இடத்தில் முளைக்கக்கூடிய விதைகள்' என்றார் ஆசிரியர்.

வரன் என்பதை மோட்ச நிலம் என்று கூறி மயக்குவாருமுளர். மோட்சம், நரகம் என்ற சொற்கள் திருக்குறளில் இல்லவே இல்லை.

வருவதைக் காணும் வாய்ப்பினை அன்று தான் காமு கண்டாள். கோதுமைப் பாகின் ஒரு பகுதியை உண்டு சுவை கண்டபின் அச்சுவையினையே துய்த்துத் துய்த்து இன்பம் கண்ட அளவில் அமைந்துவிட எவர் விழைவர்? கிடைத்த பாகு முழுவதையும் தின்று நாச்சுவையும் உடலுரமும் பெறத் தானே, மாந்தர் முயல்வர்.

“பசிக் கொடுமை வயிற்றைக் கல்லுகிறது; ஓய்வின்மையும் உழைப்பின் அலுப்பும் உடலை அலுப்புறச் செய்துவிட்டது. மார்வலியும் மண்டையிடியும் உயிரை நெருக்குகிறது. கொடுத்த அளவு கொடுங்கள்—பெற்ற நலத்தைப் பெறுகிறேன்” என்று நிலைமை கூறி, இரவு கோரும் ஒருவனின் முகம் எந்நிலையில் இருக்கும்?

“நெருக்கடி தீர, சுருங்கிய அளவு துணையேனும் வேண்டுமென்று கோரியது உண்மைதான். கவலைக் கிடமான என் நிலைமை தீர, கைம்மாறு கருதாது துணையாகத்தான் எனக்குக் கடன் தந்தீர்கள். பசிக் கொடுமையும், பஞ்சமும், என்னை இன்றளவும் விட்டபாடில்லை”.

பருவ உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு இன்பம்பெறவேண்டி, பருவத்தின் பக்குவத்தை, இளமையின் எழிலை, கட்டுடலின் கவர்ச்சியைப் புகழ்ந்துகூறி, இன்பம்பெற்றவன், ‘உணர்ச்சித் துடிப்பால் உன்னை வயப்படுத்தினேன். என் உணர்ச்சித் துடிப்பு இன்னும் ஒழிந்தபாடில்லை. உனது இன்பத்திற்காக இரந்து நின்றது முற்றிலும் உண்மைதான். ஆனால், இன்றைய என்நிலை, நான் சொன்னவாறு செய்வதற்கு இடந்தராததாகிவிட்டது கருதி நான் உண்மையிலேயே வருந்துகின்றேன்’ என்று கைநழுவவிடுகிறான் அல்லவா?

“காமவெறியை - உடற்கொதிப்பை- உடல் பசியை அன்புப் பிணையல் என்று கூறி, இன்முகம் காட்டி, இன்பம் ஈய வேண்டி இரந்துநின்ற அவன், இன்று தனது நிலைமையைக் கூறி, கவலையைக் காட்டிக் கைவிடுகின்றான். கடன்வேண்டி கை நீட்டி இரந்தபோது இருந்தமுகம், கொண்ட கடனைக் கொண்டவனிடத்தில் திருப்பித் தரும்போது மாறுபடுவது போன்றுதானே, இவன் செய்த நிலை?” என்று கூறிக் கலங்குகின்றாளல்லவா, கைநழுவவிடப்பட்ட காரிகை.

“உண்கடன் வழிமொழிந்து இரக்குங்
கால் முகனும்தாம்
கொண்டது கொடுக்குங்கால் முகனும்
வேறுகுதல்
பண்டும் இவ்உலகத்து இயற்கை”

என்ற அடிகளின் கருத்துக்களை, கருத்துக்களின் பின் அவ்அடிகளைப் படித்தபோது, இளமை ததும்பும் அவளது உள்ளத்தில் எத்துணையோ எண்ணங்கள் எழுந்தன.

“கதையா, கட்டுரையா?” என்று குறுக்கே பேசினாள், மீனா. “இரண்டும் இல்லை. இது ஒரு கட்டுரைக் கதை; இலக்கியச் சுருக்கம். இடைச் செருகப் பட்டது” காமு-விடைதந்தாள்.

“கட்டுரைக் கதையை, வைத்த கண் எடுக்காமல் படிப்பதைப் பார்த்தால், கதையையே கரைத்துக் குடித்துவிடுவாய் போலும்!” மீனா குறும்பாகப் பேசினாள்.

“இலக்கிய இன்பம் அவ்வளவு சுவை தருவது. சுவைகண்டவர்கள் சோர்வு கூடப் பாராமல் இருப்பார்கள் மீனா” என்று அழைப்பில்லாத வரவை நீட்டினான் இளமுருகன்.

“இவர் என்ன பேசுவது?” என்ற குறுஞ்சினத்தோடு முகத்தைச் சுளித்தாள், காமு. அவள் செலுத்திய சினப்பார்வை அவனை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டிருக்கும் என்றுதான் காமு நம்பினாள்; மீனாவும் நினைத்தாள். ஆனால் அவன் நினைத்தது?

[தொடரும்]

தொடர்ச்சி

# பொருட்பால்] 3 [கல்லாமை 4

## கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும் கொள்ளார் அறிவுடையார்.

[கல்லாதான் - கல்லாதவனுடைய, ஒட்பம் - பெருமையானது, கழியநன்று ஆயினும் - மிகவும் (மக்கள் பலராலும்) போற்றப் படுவதாக இருந்தாலும், அறிவுடையார் - அறிவு நிறைந்த பெரியார்கள், கொள்ளார் - அதனை உண்மையான சிறப்பாகக் கொள்ளமாட்டார்கள் (என்பதாகும்) ]

விளக்கம்:—கல்லாத மக்களுடைய ஒட்பம் (பலரும் அறிந்திருக்கக்கூடிய பெருமையாகிய புகழ்) சிறப்புடையதாக இருந்தாலும் அறிவுள்ள மக்கள் அதனை உண்மைப் புகழாகவே மதிக்கமாட்டார்கள் என்பதாகும்.

ஒட்பம் என்கின்ற சொல் இருமுறை திருக்குறளில் காணப்படுவதாகும் - ஒளி பொருந்திய தன்மையினைக் குறிப்பதாகும். ஒளி என்பது பலரும் அறியச் செய்வது. அறிவினால் உண்டாகக்கூடிய புகழும் பெருமையும்தான் உலகில் அறிஞர்களால் பாராட்டப்படுவதாகும். அறிவினால் அல்லாமல், போருள் படைத்திருப்பதாலும், பிறபல முறைகளாலும் உண்டாக்கிக் கொண்டிருப்பதாகிய ஒட்பம் (புகழ்) அறிஞர்களால் போற்றப்பட முடியாததாகும்.

ஒட்பம் - திட்பம் - நுட்பம் போன்ற சொற்கள் வருகின்ற இடங்களில் நன்கு சிந்தித்துப் பொருள்கொள்ளுதல் வேண்டும் என்பதனை பின்னர் வருகின்ற குறட்பாக்களில் கண்டு தெளிக.

கல்லாதவர்கள், தங்களை உலகிற்கு அறிமுகப் படுத்திக்கொண்டிருக்கும் பெருமை சிறந்ததாகவே காணப்படுவதாக இருக்கும் என்பதனை, கழியநன்று ஆயினும் என்பதனால் விளக்கிவிட்டார். உலக அநுபவத்தில், அறிவில்லாத பலரும், ஏனைய பிறவசதிகளால் பாமரமக்கள் புகழக்கூடியவர்களாக ஒளிவீசி வாழ்வதைக் காணுகின்றோம். அதனை உண்மையான புகழாகவே அறிஞர் கூட்டம் எண்ணுதல் இல்லை என்கின்றார் ஆசிரியர்.

ஒட்பம் என்ற சொல்லிற்கு அறிவு என்று பொருள் கொள்ளுபவர்களும் உண்டு. கல்லாத மக்களுக்கு ஒவ்வோர் சந்தர்ப்பத்தில் நல்ல அறிவு ஏற்படுவதும் உண்டுஎன்றும், அப்படியேற்பட்டுவிட்டாலும், அந்த அறிவு நிலைத்து நிற்காமல் போய்விடும் ஆதலால், அந்த அறிவினை, அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் கூறுவாரும் உளர். அப்படிக் கொள்ளுவோமானால், கல்லாதானுடைய அறிவு, கற்றவனுடைய அறிவு என்கின்ற வேறுபாடுகள் தோன்றி அறிவு என்பதன் பொருள் மயங்கினும் மயங்குமென்க.

### தமிழ்ப் பூங்கா

| ஆங்கிலம் | வடமொழி | தமிழ் |
|---|---|---|
| Calculation | | கணக்கீடு, அலகியல் |
| Telephone | | செவியொலினி |
| Farmer | விவசாயி | உழவர், நிலக்கிழார் |
| Records | தஸ்தாவேஜி | பதிப்புகள், ஆவணங்கள் |
| Hotel | போஜன சாலை | உணவு விடுதி |
| Restaurant | | சிற்றுண்டிச் சாலை |
| Roague | | கயவன், கீழ்மகன் |
| Job | உத்தியோகம் | அலுவல், தொழில், முயற்சி |

# இரு நோக்கு

A. முத்துசாமி B. A., அவர்கள்

ஒரு இந்தியனும் ஒரு ஜப்பானியனும் அமெரிக்காவிற்குச் சென்றார்கள். ஒரு பெரிய கைத் தொழிற்சாலைக்குள் இருவரும் நுழைந்து வேலைசெய்துவரும் வியக்கத்தக்க பெரும் இயந்திரங்களைக் கண்டார்கள். ஒரு நிமிடத்தில் ஆயிரக்கணக்கான பொருள்களை உற்பத்தி செய்துகொண்டு, வெகு வேகமாய்ச் சுழன்றோடும் பொறிகளைக்கண்ட இந்தியன் வியப்புற்று ஆச்சரியப்பட்டுக்கொண்டே இருந்தான். ஜப்பானியனோ தொழிற்கண் கொண்டு உற்று நோக்கி, இயந்திரம் பற்றிய நுட்பங்களையும் கைத்தொழிலின் பொருளாதார நிலைமையையுங் கேட்டு குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொண்டான். இந்தியன் கண்டான்; ஜப்பானியன் கண்டு அறிந்துகொண்டான்.

நாமும் ஒரு பொருளைப் பார்க்கிறோம். நாவலர்களும் அதே பொருளைப் பார்க்கிறார்கள். என்றாலும் இருவர் பார்வைக்கும் வேறுபாடுண்டு. பாலைவனத்தில், பட்டையுலர்ந்து பட்டுப்போன பாழ்மரத்தைப் பாவலன் பார்த்தான், மக்களின் வாழ்வு நினைவிற்கு வந்தது. உலகம் உய்யவேண்டி உயர்ந்த எண்ணங்களை உதவுகிறான். மரங்களும், ஓடும் சிற்றோடைகளும், கற்களும் அரும் நீதிகளைக் கூறுகின்றன என்று மேல்நாட்டுப் புலவர் சொல்லியபடி, காய்ந்த மரத்திலும், கவி, பெரும் உண்மையைக் கண்டான். (Tongues in trees, books in running books and sermons in stones) வறுமையுற்று வருந்தும் இளைஞனைப்போல, கிளைகள் வாடியிருந்தன. ஒருவர்க்கும் உதவாத உலோபியின் செல்வம் போன்று, அம்மரம் அடைந்தார்க்கு நிழலின்றி நின்றது. பல்லோருடனும் பகைத்து வாழ்ந்த பேதையின் முடிவு போல, வேருடன் வெம்பி நின்றது. கொடுங்கோலாட்சிக்குட்பட்ட நாடு போல் உலர்ந்து காணப்பட்டது. கலித்தொகையென்னும் சங்க இலக்கியத்தில், பாலை பாடிய பெருங்கடுங்கோ இவ்வாறு கூறியுள்ளனர்.

“ வறியவன் இளமைபோல்
வாடியசினைய வாய்ச்
சிறியவன் செல்வம் போல் சேர்ந்தார்க்கு
நிழல் இன்றி
யார்கண்ணும் இகந்து செய்து
இசை கெட்டான் இறுதிபோல்
வேரோடும் மரம் வெம்ப ……………….
……………….கோல் கோடியவன் நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம். ”

வேப்பமரம் எங்கும் காணப்படுகிறது. நாமும் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம். பட்டை இலை பூ வித்து முதலிய ஒவ்வொரு பாகமும் மருந்தாகப் பயன்பட்டு வருகிறது. வள்ளுவரும் இம்மரத்தைக் கண்டார். பேருண்மை யொன்றை உலகிற்கு எடுத்துக்காட்டினார். இம்மரம் எல்லோர்க்கும் ஒளியாமல் எளிதாக, தன் உறுப்புக்களை மருந்தாக உதவி வருகிறது. பெருந்தன்மையுடைய உபகாரியின் செல்வமும் வறியர்கட்கு இவ்வாறு பயன்படவேண்டும். மருந்தாகி உடற்பிணியைப் போக்கும் இம்மரம்போல, இவன் செல்வமும் வறிஞரின் பசிப்பிணியை நீக்கவேண்டும். செல்வனும் பசிப்பிணி மருத்துவனாக வேண்டும்.

“ மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகையான் கண் படின் ”

அரும் பெரும் நற்காரியங்களைச் செய்யவேண்டுமென பலர் ஆசைப்படுகின்றனர். ஆனால் முடியுமா முடியாதாவென எண்ணித் தளர்வுறுகின்றனர். ‘அருமையுடைத் தென்று அசாவாமை வேண்டும்’ என்னும் குறளடியை மறந்து மயங்குகின்றனர். உள்ளத்தில் உள்ளுவன வெல்லாம் உயர்ந்த எண்ணங்களாக இருக்கவேண்டும். பயன் பெறாவிடினும் பிழையன்று. சிறிய எண்ணங்கள் உள்ளத்தைச் சுருக்கிவிடும். உள்ளற்க உள்ளம் சிறுகுவ.

(தொடரும்)

---

தொடர்ச்சி

# காமத்துப்பால்] 3 [புணர்ச்சி மகிழ்தல் 4

**நீங்கிற் றெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்.**

[நீங்கின் - (தன்னை விட்டு) நீங்கினால், தெறூஉம் - சுடுகின்றதும் (சுடுவதும்) குறுகுங்கால் - நெருங்கும்பொழுது (நெருங்கினால்) தண் என்னும் - குளிர்ச்சியாகவும் (இன்பமாகவும்) இருக்கக்கூடிய, தீ - நெருப்பினை, இவள் - இப்பெண், யாண்டு - எங்கே, பெற்றாள் - பெற்றிருக்கின்றாளோ.]

**விளக்கம்** :—சேர்ந்து இன்பம் பெற்ற அந்தக் காதலன், தனது காதலியாகிய அப் பெண்ணினைப் பாராட்டிப் பேசுகின்றான். அப்பெண்ணை விட்டு நீங்கினால் அவனை சுட்டுவிடுகின்றதாம். நெருங்கியே இருந்தால் குளிர்ச்சியாக (இன்பமாகவே) இருக்கின்றதாம். இப்படிப்பட்ட நெருப்பினை அந்தப் பெண் எப்படிப் பெற்றிருக்கின்றாளோ தெரியவில்லையே என்று கூறுகின்றான். அவனுடைய வியப்பு அவ்வாறு பேசச் சொல்லுகின்றது.

அப் பெண்ணினிடத்தில் ஒருவிதமான நெருப்பு இருப்பதாகக் கூறுகின்றான். அது ஒரு புதுமாதிரியான நெருப்பாக இருக்கின்றதாம்!

சாதாரண நெருப்பின் குணம் - அதாவது உலக இயற்கையில் - நெருப்பினைத் தொட்டால், அல்லது அருகில் சென்றால் சுட்டுவிடும், துன்பத்தைக் கொடுக்கும். விட்டு நீங்கினால் சுடாது, துன்பத்தைக் கொடுக்காது.

இந்தப் பெண்ணினிடத்தில் இருக்கும் நெருப்போ, அப்படிப்பட்டதில்லை. விட்டு நீங்கினால்தான் சுட்டுவிடுகின்றதாம்; அருகில் நெருங்கிஇருந்தால் சுடாமல் குளிர்ச்சியாக இருக்கின்றதாம். ஆ! என்ன அதிசயமான தீ என்று பேசிவிடுகின்றான்.

அப் பெண்ணினிடத்தில் நெருங்கி இருக்கும்பொழுது அவன் இன்பத்துடன் இருக்கின்றான். அப் பெண்ணை விட்டுப் பிரிந்தாலோ துன்புறுகின்றான். இதனை, தான் துன்பம் அடைவதை, விட்டுப் பிரிந்தால் சுடுகின்ற நெருப்பு என்று கூறிவிடுகின்றான்.

காமம் என்பதனையே தீ என்பதாகக் குறித்து, அந்தத் தீ அவளாலேயே உண்டாக்கப்பட்டு அங்கிருந்தே உண்டாவதால் அப்பெண், இப்படிப்பட்ட தீயினை, “யாண்டுப் பெற்றள்” என்று பெருவியப்புடன் கேட்டுவிடுகின்றான்.

தெறூம் (தெறூ உம்) என்பது துன்பத்தினைக் கொடுத்துச் சுடுகின்றது என்பதனைக் காட்டுவதாகும். நீங்குதல் - குறுகுதல் - சுடுதல் - குளிர்ச்சியாக இருத்தல் ஆகிய செயல்களை, கண்டநுபவித்த காதலன் கூறிச்செல்லுகின்றான். நெருப்பு சுடாமல் இருப்பதைத்தான் யாவரும் விரும்புவார்கள். அதுபோல தான் அக்காதலியைப் பிரியாமலேயே இருக்க வேண்டியவனாகிவிட்டான் என்ற கருத்தினை இவ்வாறு குறித்துக் காட்டிவிட்டான் என்பதாகும்.

ஆசிரியர் : திருக்குறள் வீ. முனிசாமி, வெளியிடுவோர் : ந. கணபதி (பென்னக்குணம்), அச்சிடுவோர் : வெ. மாணிக்கம் பிள்ளை,
இம்பீரியல் அச்சகம், 1. பெரியகம்மாளத்தெரு, திருச்சிராப்பள்ளி.